# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: சு. மூர்த்தி., தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் , இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சிபொதுப்பிரிவு, பொறியியல், குடிநீர் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுாகதார பிரிவு பணியாளர்களுக்கு திருவிழாகால முன்பணம் வழங்க அனைத்து பிரிவு பணியாளர்களும் மனுவில் கோரியுள்ளார்கள். அதன்படி, இந்நகராட்சி முன்பணம் கோரும் மொத்த நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை 58, தமிழக அரசாணை எண் 240 நாள் : 02–08–2019ல் குறிப்பிட்டுள்ள படி ஒவ்வொருவருக்கும் வழங்கும் தொகை ரூ.10000/–ஆகும் எனவே, மேற்காணும் 58 பணியாளர்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.580000/–க்கு மேற்கொள்ள மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 535 அனுமதிக்கப்பட்டது. |
| 2 | இராமேஸ்வரம் நகராட்சியில் தெருவிளக்குகள் மேம்பாடு செய்திடும் பொருட்டு கீழ்காணும் விபரப்படியாக பணிகள் தேர்வு செய்தும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ததும் தனிஅலுவலரின் | தீர்மானம் எண். 536 அனுமதிக்கப்பட்டது. |

பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் எல்.இ.டி. தெரு மின் விளக்குகள்அமைத்தல் | ரூ.25.00 |
| 2. | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் மின் கண்டக்டர் லயன் புதிதாகஅமைத்து எல்.இ.டி. தெரு மின் விளக்குகள்அமைத்தல் | ரூ.170.00 |
| 3. | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக மின் கம்பங்கள் நிறுவியும், புதிதாக கண்டக்டர் லயன் அமைத்து மின் சேமிப்பு எல்.இ.டி. தெரு மின் விளக்குகள்அமைத்தல் | ரூ.55.00 |
| 4. | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட மதுரை–தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை, சுற்றுலா பேருந்து நிலைய அணுகுசாலை மற்றும் நடுத்தெரு பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான மின் கம்பங்களை சாலை ஓரத்திற்கு மாற்றியமைத்து அதில் உள்ள சி.எப்.எல். விளக்குகளை அகற்றிவிட்டு, புதிய மின் சேமிப்பு எல்.இ.டி. தெரு மின் விளக்குகள்அமைத்தல் மற்றும் கேபிள்பதித்தல் பணி | ரூ.100.00 |
| | **மொத்தம்** | **ரூ.350.00** |

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்து முழுமான்யமாக பெற்று நிர்வாக அனுமதி பெற மேல் நடவடிக்கை தொடரலாம்.

| | | |
|---|---|---|
| 3 | இராமேஸ்வரம் நகராட்சிக்குள் நுழையும் வாகனங்கள் மற்றும் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்ய ஏதுவாக கீழ்கண்டவாறு இரசீதுகள்அச்சடித்து வழங்க ஆகும் உத்தே சசெலவினத்தொகை | தீர்மானம் எண். 537 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>1. அரசு பேருந்துகள் ரூ.8/—க்கான ரசீது – 1 முதல் 10000 வரை<br>2. நான்கு சக்கர வாகனம் ரூ.100/—க்கான ரசீது – 1 முதல் 50000 வரை<br>3. ஆறு சக்கர வாகனம் ரூ.150/—க்கான ரசீது – 1 முதல் 25000 வரை<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. விரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பித்து, நிர்வாக அனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடரலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சி, பொறியியல் பிரிவு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கும், சுகதாரபிரிவு விழிப்புணர்வு அறிவிப்பு செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் செலவினம் மாலை முரசு நாளிதளுக்கு ரூ.18900/—கும் கிராலிச் ஆர்ட்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்திற்கு ரூ.88234/— ம் ஆக மொத்தம் ரூ.107134/— நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 538 அனுமதிக்கப்பட்டது |

ஆணையாளர்/தனி அலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி